**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO. II**
**DINDIGUL.**

**C.C.No.339/2021**

**Prosecution Witness : 1**

| | | | |
|---|---|---|---|
| **Name** | : பாண்டியன் | **Caste** | : |
| **Father's Name** | : கிருஷ்ண கோனார் | **Calling** | : டிரைவர் |
| **Village** | : குரும்பப்பட்டி | **Religion** | : |
| **Taluk** | : திண்டுக்கல் | **Age** | : 69 |
| | | **Dated** | : 27.01.2026 |

**27.01.2026**
இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 (பிரிவு 4 ) – ன் படி சாட்சிக்கு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

பட்டியல் சாட்சி–1 **திரு. பாண்டியன்** ஆஜர். பிரமாணம் போதிக்கப்பட்டு **அ.சா.** 1 ஆக முதல் விசாரணை செய்யப்பட்டார்.

**எதிரி ஆஜர்.**
**முதல் விசாரணை**

நான் திண்டுக்கல் குரும்பப்பட்டியில் குடியிருந்து டிவைராக வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும். கடந்த 2019ம் வருடம் தேதி மாதம் நினைவில் இல்லை. சுமார் 5 மணியளவில் திண்டுக்கல் செல்வதற்காக நான் எனது வீட்டின் வாசலில் நின்று கொண்டிருந்த போது எதிரி என் மீது இடித்துவிட்டார். எங்கள் இருவருக்கும் வாக்குவாதம் ஏற்பட்டது. அவர் இடித்ததில் நான் கீழே விழுந்ததில் எனக்கு தலையில் ரத்தக்காயம் ஏற்பட்டது. எங்களுக்குள் வாக்குவாதம் ஏற்பட்டது. அப்போது ராமராஜம் சீனியம்மாளும் வந்தார்கள். நடந்த சம்பவத்திற்காக காவல் நிலையம் சென்று தகவல் சொன்னேன். போலீசார் என்னிடம் எழுதிய தாளில் கையொப்பம் பெற்றார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் நான்

கொடுத்தது. அதில் உள்ள கையொப்பம் என்னுடையது. எதிரியும் நானும் ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள் என்பதால் ஊர் பெரியவர்கள் முன்னிலையில் சமாதானம் செய்து கொண்டோம். சமாதான மனு தாக்கல் செய்துள்ளேன். சமாதான மனுவில் உள்ள நிகழ்நிலை புகார்தாரர் கையொப்பம் என்னுடையது. வழக்கை மேல்நடத்த விரும்பவில்லை. **புகார் அ.சா.ஆ1 ஆகவும், சமாதான மனுவில் உள்ள நிகழ்நிலை புகார்தாரர் கையொப்பம் அ.சா.ஆ.2 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.**

<u>அரசு தரப்பில் சாட்சி பிறழ்சாட்சியாக கருதக்கோரி அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

கடந்த 31.03.2019ம் தேதி மாலை 05.00 மணிக்கு நான் எனது வீட்டின் வாசலில் நின்றிருந்தபோது எதிரி முந்தைய பிரச்சனைகளை மனதில் வைத்து என்னை பெரிய மனிதர் என்று பார்க்காமல் அசிங்கமான வார்த்தைகளில் பேசி கைகளால் அடித்தார். ஏன் அடிக்கிறார் என்று கேட்டதற்கு கையில் வைத்திருந்த இரும்பு கம்பியால் எனது தலையில் அடித்து ரத்தக்காயத்தை ஏற்படுத்தினார். நான் சத்தம் போடவே தடுக்க வந்த ராமராஜீம், சீனியம்மாளையும் எதிரி கையில் வைத்திருந்த கம்பியால் ராமராஜீன் தலையிலும் சீனியம்மாளின் வலது கையிலும் அடித்து ரத்தக்காயம் ஏற்படுத்தினார். மேலும் அக்கம்பக்கத்தில் இருந்தவர்கள் வரவும் எதிரி கம்பியை காட்டி கொலை மிரட்டல் விடுத்து அங்கிருந்து ஓடிவிட்டார் என்றும், தனக்கு ஏற்பட்ட காயத்திற்காக மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த போது நடவடிக்கை எடுக்க புகார் மனு போலீசாரிடம் கொடுத்துவிட்டு தற்சமயம் நீதிமன்றத்தில் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை</u>

இல்லை

taken down by me in open court read over to the Witness in the presence of the accused interpreted to him Tamil and admitted by him to be correct.

DINESH KUMAR C
Digitally signed by DINESH KUMAR C
Date: 2026.01.27 15:13:05 +0530

Judicial Magistrate No.II

Dindigul.